விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 340 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 08 சனிக்கிழமை (23.11.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## சர்வதேச நாணய நிதியத்துடனான 3வது மீளாய்வுக் கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடனான 3ஆவது மீளாய்வுக் கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்ததாக ஜனாதிபதி ஊடகப் பரிவு அறிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்தப்பட்ட மூன்றாவது மீளாய்வுக் கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதில் சர்வதேச 11

## அர்ச்சுனாவுக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு

(கொழும்பு)

புதிய பாராளுமன்ற உறுப்பினராகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட மருத்துவர் அர்ச்சுனாவுக்கு எதிராக சிவில் செயற்பாட்டாளர்கள் குழுவொன்று குற்றப் 11

## மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு நல்லூரில் இன்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

மாவீரர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு நல்லூரில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

1982 கார்த்திகை 27 லிருந்து 2009 வைகாசி 18 வரையான காலப்பகுதியில் தாய் மண்ணின் விடியலுக்காய் வித்தாகியவர்களில் எமக்கு விபரங்கள் பெற்றுக் கொள்ள 11

## தேநீர் அருந்திக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தர் திடீரென மரணம்
### மானிப்பாயில் சம்பவம்

(மானிப்பாய்)

மானிப்பாய்ப் பகுதியில் வீட்டில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த இளம் குடும்பஸ்தரொருவர் நேற்றுத் திடீரென உயிரிழந்துள்ளார்.

இதில் உதயகுமார் சஜிந்தன் 11

## மக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தாமல் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது
### ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



(அக்குரேகொட)

பொதுமக்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தாமல் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பொன்னாலையில் 14 வயது மாணவி சடலமாக மீட்பு

(பொன்னாலை)

யாழ்ப்பாணம் பொன்னாலைப் பகுதியில் 14 வயது பாடசாலை மாணவியொருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையில் தரம் 9இல் கல்வி 11

## அரியாலையைச் சேர்ந்தவர் கனடாவில் படுகொலை
### சந்தேகத்தில் மகன் கைது

(ஸ்காபுரே)

கனடாவில் ஈழத்தமிழர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாக ரொரன்ரோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அரியாலையைச் சொந்த இடமாகக் கொண்ட குலதுங்கம் மதிசூடி (வயது-66) என்றநபரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஸ்காபுரேப் பகுதியில் வசித்து வந்த 11

## மழையால் ஏற்படும் இடர் நிலைகளை எதிர்கொள்ள வடக்கு மாகாணம் தயார்
### துறைசார் தலைவர்கள் வடக்கு ஆளுநரிடம் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாட்களில் வடக்கு மாகாணத்தில் மழையால் இடர் பாதிப்புக்கள் ஏற்படுமாக இருந்தால் அவற்றை எதிர்கொள்வதற்குத் தயார் நிலையில் இருப்பதாகத்துறைசார் திணைக்களத் தலைவர்கள் வடக்கு மாகாண 11

## வங்காள விரிகுடாவில் காற்றழுத்தத் தாழ்வு இன்று உருவாகலாம்

(கொழும்பு)

தென் கிழக்கு வங்காள விரிகுடாப் பகுதியில் இன்று குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் உருவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அது, அடுத்து வரும் இரு நாட்களில் காற்றழுத்தமாக விருத்தியடை 02

## வெள்ளம் ஏற்படலாம்
### கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்களுக்கு எச்சரிக்கை

(கிளிநொச்சி)

எதிர்வரும் நாட்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது. இதனால் பல பகுதிகளில் வெள்ளம் ஏற்படலாம்.

இது தொடர்பில் முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு கிளிநொச்சி, முல்லைத்தீவு மக்களுக்கு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப்பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது. 02

## உரும்பிராயில் கசிப்புடன் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

உரும்பிராயில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட மூவர் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

உரும்பிராய் தெற்கு செல்வபுரம் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை...

அக்குரேகொட பாதுகாப்பு படைத் தலைமையக வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் பாதுகாப்பு அமைச்சராக நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்ற போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், அரசியலமைப்பிலும் சட்டங்களிலும் எத்தகைய சட்ட ஒழுங்குகள் இருந்தாலும் மக்களின் அதிகாரம் தான் பலமாக உள்ளது என்பதை வலியுறுத்திய ஜனாதிபதி, கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் வழங்கப்பட்ட ஆணைகளின் கட்டமைப்பு மற்றும் வடிவங்களைப் பார்க்கும் போது அவர்களின் எதிர்பார்ப்புகள் பிரதிபலிக்கின்றன என்றும் தெரிவித்தார்.

எனவே, தமது அரசாங்கத்திற்கு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு அரசியல் தலைமைத்துவத்தை வழங்குவதைத் தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அதனை நனவாக்க அரச ஊழியர்களின் ஆதரவு அவசியம் என்றார்.(ம-7)

## வெள்ளம்...

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் கனமழை பெய்து வருகின்றது. 27 ஆம் திகதி வரை மழை தொடரும், 24 முதல் 27 வரை மிகவும் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. இதனால் பல பகுதிகளில் வெள்ளம் ஏற்படலாம்.

எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்:

வீட்டின் அருகிலும் சாலைகளிலும் உள்ள வடிகால்களை சுத்தப்படுத்துங்கள். சிரமமாக இருந்தால் கிராம நிலதாரியிடம் தகவல் வழங்கி உதவுங்கள்.

மழை நீடித்தால் 3, 4 நாட்களுக்கு தேவையான உலர் உணவுகளை சேமித்து வையுங்கள்.

குழந்தைகளை வெள்ளநீரில் விளையாட விடாதீர்கள். பாதுகாப்பான குடிநீரை மட்டும் பருகுங்கள்.

விழிப்புடன் இருங்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


# பதவி வெற்றிடம்

- **கணினி தமிழ் ரைப்பிங்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**
  (சாதாரண தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது **076 097 3121** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
வலம்புரி நாளிதழ்.



**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(559)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956156719**

Western Union, MoneyGram, Ria Money Transfer ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974


## காற்றழுத்த...

யும் என அந்தத் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அத்துடன், மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் 100 மில்லிமீற்றருக்கும் அதிக மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும்.

அத்துடன் வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மழை பெய்யக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. (ம-7)


# காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடியில் 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன்**

**1 பரப்பின் விலை :**

**23 இலட்சம் ரூபாய் [ 23 00 000/= ]**

- 20 அடிப் பாதை
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம்
  காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை.

(2492)

**076 755 8606, 070 168 3354, 070 668 3354**


# வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்
### உத்.இல - 22, பருத்தித்துறை வீதி, வட்டாரம் - 01

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, பருத்தித்துறை வீதியிலுள்ள உத்.இல - 22 ஆகிய ஆதனம் எமது ஆதன வரிப்பதிவேட்டில் இதுவரை காலமும் பதியப்படவில்லை.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதியினை **நாகர் சின்னத்தம்பி** ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு **M.K.சுப்பிரமணியம்** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 393/30.01.1941 ஆம் இலக்க உறுதியால் **சின்னப்பொடி நாகரும், சின்னப்பொடி வைரமுத்துவும்** ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

**சின்னப்பு பொன்னம்பலம்** ஆகியவர் குறித்த ஆதனத்தில் ஒரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு **வே.நாகலிங்கம்** முகதாவில் 10904/06.09.1964ஆம் இலக்க உறுதியால் குறித்த **நாகர் சின்னத்தம்பி** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.

குறித்த **சின்னப்பு பொன்னம்பலம்** ஆகியவர் குறித்த முழு ஆதனத்தில் மற்றொரு பகுதியினை பிரசித்த நொத்தாரிசு **வே.நாகலிங்கம்** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 8965/02.09.1956 ஆம் இலக்க உறுதியால் **சடையர் நாகமுத்து கைம்பெண் செல்லாச்சி** ஆகியவரிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த **சின்னப்பு பொன்னம்பலம்** காலஞ்செல்ல குறித்த ஆதனம் அவரது பிள்ளைகளான **பொன்னம்பலம் பாலகிருஸ்ணன், புவனேஸ்வரி பொன்னம்பலம்** ஆகியவர்களுக்கு முதுசமாக சென்றடைந்தது.

**அன்ரன் சந்திரகுமார் பிரான்சிஸ்** ஆகியவர் மேற்படி ஆதனங்களை உள்ளடக்கிய ஆதனத்தினை பிரசித்த நொத்தாரிசு **ப.திலக்ஷனா** முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1397/12.07.2022ஆம் இலக்க உறுதியால் குறித்த **பொன்னம்பலம் பாலகிருஸ்ணனும், புவனேஸ்வரி பொன்னம்பலமும்** ஆகியவர்களிடமிருந்து அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்தும் உடையவரானார்.


குறித்த **அன்ரன் சந்திரகுமார் பிரான்சிஸ்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **அன்ரன் சந்திரகுமார் பிரான்சிஸ்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை.

(2488)

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 20 - 08 - 1956 | 22 - 11 - 2024 |

## சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரநாதன் (நாதண்ணா)

**(முன்னாள் மாயவன் பல்பொருள் வாணிப உரிமையாளர் - நெல்லியடி)**

*அல்வாய் கிழக்கு பத்தானையைப் பிறப்பிடமாகவும் இலகடி மற்றும் பத்தானையை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரநாதன்(நாதண்ணா) அவர்கள் 22.11.2024 நேற்று வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.*

*அன்னார் அமரர்களான சிதம்பரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மகனும் அமரர்களான மாணிக்கம் - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் கருணாதேவி(கருணா)அவர்களின் பாசமிகு கணவரும் தனேந்திரன்(கண்ணன்-கனடா), சபேசன்(சாந்தன் -சுவிஸ்) குணேந்திரன் (கோபி தையலகம் மாலுசந்தி), தாட்சாயினி (ஆசிரியர் - மு/பாரதி ம.வி), ஜெயராம்(ராம் குட்டி -ஆசிரியர் மல்லாவி ஐயன்கன் குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் யாழினி(கனடா), கேசிகா(இலங்கை), சசிரேகா(ரேகா -சுவிஸ்), பிரேமநாத்(இலங்கை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அனிக்கா, அனன்யா(கனடா), வாசனா, விதுர்சனா(இலங்கை), அஹானா(சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 24.11.2024 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் பத்தானை அல்வாயில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காலை 10.00 மணியளவில் கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.*

பத்தானை, அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

*தகவல் :* குடும்பத்தினர்
தாட்சா(மகள்) : 077 758 6094

(C-1640)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பரீட்சார்த்திகளின் கவனத்திற்கு!

# அனர்த்தம் ஏற்பட்டால் 117 ஐ அழைக்கவும்

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையின் போது ஏற்படக்கூடிய அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காகவும் பரீட்சையை இடையூறுகள் இன்றி நடத்துவதற்காகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையமும் பரீட்சைத் திணைக்களமும் இணைந்து விசேட வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளன. பரீட்சை காலத்தில் ஏற்படக் கூடிய அனர்த்த சூழ்நிலை களைத் தவிர்த்து மாணவர்கள் பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் வகையில் நல்ல சூழலை உருவாக்கு வதற்காகவும் அத்துடன், பரீட்சை கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு ஏற்படக் கூடிய தடைகளைத் தவிர்ப் பதற்காக அவசரகால பதில் ஒருங்கிணைப்பு பொறி முறையை வலுப்படுததவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பேரிடர் மேலாண்மை செயல்முறை தொடர்பான நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து, ஆயுதப்படை, பொலிஸ்துறை உட்பட தேர்வுக் காலத்தில் ஏற்படக்கூடிய தடைகளை நிர்வகிக்கத் தேவையான வழிகாட்டுதல்கள் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன.

ஏதேனும் அனர்த்தம் காரணமாக் பரீட்சைக்குத் தோற்றுவதில் மாணவர் தடுக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட நிலையத்தை அடைவதற்கான உதவிகளைப் பெறுவதற்கு பல தொலைபேசி இலக்கங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.


இதன்படி, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் துரித இலக்கமான 117 அல்லது விசேட ஒருங்கிணைந்த அவசர செயற்பாட்டு இலக்க மான 076 311 7117 இற்கு அறிவிக்க முடியும்.

அவ்வாறு இல்லை என்றால் பரீட்சைத் திணைக்களத்தின் அவசர இலக்கமான 1911 இற்கு நீங்கள் அழைக்கலாம். மேலும் விரைவில் தடைகளை அகற்றுவதற்கு தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ள முடியும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

2024 க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளானது எதிர்வரும் நவம்பர் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், அடுத்த சில நாட்களில் வங்காள விரிகுடாவில் எதிர்வரும் வாரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்கள் வழங்கப்படாது!

## அநுர அரசு அதிரடி



(கொழும்பு)

**இலங்கையில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எரிபொருள் சிக்கன வாகனம் வழங்கப்படும் என பொதுப் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.**

பதவிக்காலம் முடியும் வரை அந்த வாகனத்தை பயன்படுத்தி மக்கள் சேவையை மேற்கொள்ள முடியும் என அமைச்சர் ஆனந்த விஜேபால குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொகுசு வாகனங்கள் வழங்கப்படாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் வரிப்பணம் விரயமாவதை குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த கால அரசாங் களில் அமைச்சுக்களின் செயலாளர்கள் முதல் அமைச்சர்கள் வரை அதி சொகுசு வாகனங்கள் வழங் கப்பட்டதுடன், பெருந்தொகை மக்களின் வரிப்பணம் செலவிட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# சர்வதேச ஊடக அரங்கில் இடம்பிடித்த இலங்கையின் பாராளுமன்றம்



(கொழும்பு)

10ஆவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் நேற்று முன்தினம் முற்பகல் மிகவும் எளிமையான முறையில் இடம்பெற்றது. இந்நிலையில் இது தொடர்பான செய்திகள் சர்வதேச ஊடக அரங்கில் இடம்பிடித்திருப்பதை காணக்கூடியதாக உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# எதிர்க்கட்சி எம்.பிக்களை இணைப்பதில் மொட்டு தீவிரம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தி பின்னர் பிரிந்து சென்ற உறுப்பினர்களை மீண்டும் இணைப்பதற்கான கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து தற்போது பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும், அக்கட்சியில் இருந்து விலகி ஏனைய கட்சிகளில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்றத்தில் ஒரே குழுவாக செயற்படுவது தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

மேலும் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களை இந்தக் குழுவில் சேர்ப்பது குறித்து மொட்டுக் கட்சி கவனம் செலுத்திவருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)

# ஐ.நா ஆணைக்குழுவில் இலங்கையும் தெரிவானது

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் கடந்த புதன்கிழமை சர்வதேச வர்த்தகச் சட்டத்திற்கான ஐக்கிய நாடுகளின் ஆணைக் குழுவிற்கு தெரிவு செய்யப்பட்ட முப்பத்தொரு உறுப்பினர்களில் இலங்கையும் ஒன்றாகும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை ஆசிய பசுபிக் குழுவில் ஆசனமொன்றிற்குப் போட்டியிட்டு மொத்தமாக 177 வாக்குகளைப் பெற்றது.

இது குழுவிற்குள் இரண்டாவது அதிக எண்ணிக்கையிலான வாக்குகளாவதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட முப்பத்தொரு உறுப்பினர்களில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டாவது அதிக வாக்குகளாகும்.

மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், வியட்நாம், சீனா, ஜப்பான் மற்றும் கொரியக் குடியரசு ஆகியவை ஆசிய பசிபிக் குழுவிலிருந்து, சர்வதேச வர்த்தகச் சட்டத்திற்கான ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்ற உறுப்பு நாடுகளாகும். இலங்கையானது, 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல், ஆறு வருட காலத்திற்கு இதில் பணியாற்றவுள்ளது. (நி-8)

# கல்வித் திட்டங்களை மீளாய்வு செய்ய தீர்மானம்

(கொழும்பு)

கடந்த 5 ஆண்டுகளில் கல்வித்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பான பல்வேறு திட்டங்களை மீளாய்வு செய்ய கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய கல்வி நிறுவனம் உள்ளிட்ட பல்வேறு கல்வித்துறைசார் நிறுவனங்களால் அண்மைக்காலமாக கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பான பல்வேறு முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ தெரிவித்துள்ளார்.

எனினும், அந்த முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படும் நிலையை எட்டவில்லை.

இந்த முன்மொழிவுகள் மற்றும் வேலைத்திட்டங்களை மீளாய்வு செய்த பின்னர், தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க புதிய கல்வி சீர்திருத்த முன்மொழிவு முன்வைக்கப்படும் என்று செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசையை ஒட்டிய நாவலர் நினைவரங்கம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் நாவலர் சிலை முன்றிலில் நேற்று காலை கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது.
(படம்-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கனிஷ்ட அணியில் இடம்பிடித்த 3 யாழ். வீரர்கள்







ஐக்கிய அரபு இராச்சியத்தில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள 19 வயதுக்குட்பட்ட ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டி மற்றும் பங்களாதேஷ்க்கு எதிரான 17 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் தொடர் ஆகியவற்றில் பங்குபற்றவுள்ள இலங்கை கனிஷ்ட அணிகளில் யாழினைச் சேர்ந்த மூன்று இளம் வீரர்கள் இடம்பெறு கின்றனர்.

யாழ். மத்திய கல்லூரியின் இடதுகை வேகப்பந்து வீச்சாளர் ரஞ்சித்குமார் நியூட்டன், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் மலிங்க பாணி வேகப்பந்து வீச்சாளர் கே. மாதுளன் ஆகிய இருவரும் 19 வயதுக் குட்பட்ட ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இல ங்கை அணியிலும்.

அதே வேளை பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி வீரர் வீ. ஆகாஷ் 17 வயதுக்குட்பட்ட பங்களாதேஷ்டனான கிரிக்கெட் தொடருக்கான இலங்கை அணியில் இடம் பெறுகின்றனர்.

இந்த மூன்று வீரர்களும் தம்புள்ளை பிராந்திய அணியில் திறமையை வெளிப்படுத்தியதன் பலனாக இலங்கை கனிஷ்ட அணிகளில் இடம்பிடித்துள்ளனர்.


இந்நிலையில் இந்த மூன்று வீரர்களுக்கும் கிரிக்கெட் உபகரணங்களை இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் ஜாம்பவான்களில் ஒருவரான குமார் சங்கக்கார அன்பளிப்பு செய்துள்ளார்.

கனிஷ்ட இலங்கை அணிகளில் ஒரே நேரத்தில் 3 யாழ். வீரர்கள் இடம்பெறுவது இதுவே முதல் தடவை யாகும். இதற்கு முன்னர் யாழ். மத் திய கல்லூரியின் முன் னாள் வீரர் விஜயகாந்த் வியாஸ் காந்த் 19 வயதுக் குட்பட்ட இலங்கை அணியில் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 150 | 100-140 | 160 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 200-250 | 250 |
| தக்காளி | 300 | 350 | 250-300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 100-140 | 150 |
| கோவா | 150 | 250 | 250 | 200 |
| கரட் | 200 | 250 | 150 | 250 |
| பூசணி | 120 | 100 | 80-100 | 160 |
| புடோல் | 180 | 150 | 200 | 160 |
| வாழைக்காய் | 80 | 150 | 50-80 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 150-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 320 | 350 |
| பாகற்காய் | 500 | 650 | 500 | 800 |
| வெண்டக்காய் | 120 | 150 | 100-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 120 | 200 |
| பயற்றங்காய் | 240 | 250 | 250-300 | 400 |
| லீக்ஸ் | 250 | 250 | 200 | 300 |
| பீற்றூட் | 180 | 250 | 100 | 300 |
| கறிமிளகாய் | 600 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 400 | 500 | 600 |
| போஞ்சி | 500 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 80 | 150 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 60-80 | 150 |
| தேசிக்காய் | 650 | 800 | 600-700 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 80-170 | 120-170 |
| இராசவள்ளி | 900 | 650 | 700 | 1600 |
| வெங்காயப்பூ | 500 | -- | -- | -- |
| முள்ளங்கி | 120 | 100 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 70 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 200 | 100 | 80 | 200 |

# அவதாரப் பிரசன்னம்: பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா



(பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் பிறந்த தினத்தையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது)

பகவான் ஸ்ரீ சத்திய சாய் பாபா, உலகம் முழுவதும் மக்களின் மனதில் ஆழமாகப் பதிந்துள்ள தெய்வீக அவதாரம். அவரது பிறப்பு, வாழ்க்கை, அவ்வாழ்க்கை தரும் செய்திகள் மற்றும் அவரின் போதனைகள், தெய்வீக வெளிப்பாடுகள் இன்றும் அவரின் பிரசன்னத்தை உலகறியச் செய்கின்றது. நவம்பர் 23ஆம் திகதி 1926 அன்று இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் உள்ள புட்டபர்த்தியில் அவதரித்தார். இந்து தத்துவத்தில் "அவதாரம்" என்பது ஒரு தெய்வீக நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் தெய்வம் பூமிக்கு ஒரு உடல் வடிவத்தில் அவதரிப்பதைக் குறிக்கின்றது. தெய்வீக நோக்கம் என்பது தர்மத்தை மீட்டெடுத்து அன்பு மற்றும் இரக்கம் என்பவற்றை உலகில் மேம்படுத்துவதாகும். பகவான் குழந்தைப் பருவத்திலிருந்தே ஆன்மிக உண்மை கள் மற்றும் அற்புதமான திறன்கள் பற்றிய ஆழமான புரிதலை அவர் வெளிப்படுத்தினார்.

பாபாவின் வாழ்க்கை அவர் மக்களிற்கு தரும் உயர்ந்த ஆன்மிகப் போதனைகளாகும். இப்போதனைகளின் மையத்தில் ஐந்து அடிப்படைக் கொள்கை கள் "ஐந்து மனித விழுமியங்கள்" குறிப் பிடப்படுகின்றன. அவையாவன சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை என்பவாகும். இப்போதனைகளை ஒரு தார்மீக திசைகாட்டியாகப் பின்பற்றி வாழ வேண்டும் என்று பகவான், மனித குலத் திற்கு தான் வாழ்ந்து காட்டி வழிகாட்டுகின்றார். இந்த விழுமியங் களைப் புரிந்து கொள்வதும் நடைமுறைப் படுத்துவதும் தனிப்பட்ட மாற்றத்திற்கும் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் அவசியம் என்பதை போதனைகள் வலியுறுத்துகின்றன.

சுவாமியின் பணி மூன்று முக்கிய கோட்பாடுகள் மூலம் வடிவம் பெறுகின்றது. தன்னலமற்ற சேவை, அன்பு மற்றும் ஆன்மிக வழிகாட்டி மனித குலத்திற்கு சேவை செய்வது கடவுளுக்கு சேவை செய்வதற்கு சமம் என்று பகவான் அடிக்கடி வலியுறுத்துவார். இலவசக் கல்வி, சுகாதாரம் மற்றும் பேரிடர் நிவாரணம் போன்ற பல்வேறு தொண்டுகள் மூலம் சுவாமியின் நிறுவனங்கள் மில்லியன் கணக்கான உயிர்களிற்கு தன்னலமற்ற சேவை செய்து கொண்டிருக்கின்றார்கள். சுயநலம் மற்றும் பேராசையால் அழிந்து கொண்டுபோகும் இவ்வுலகில் பகவானின் தன்னலமற்ற சேவைக்கான அழைப்பு ஆழமாக எதிரொலிக்கின்றது. உண்மையான ஆன்மிகம் என்பது சேவை செய்வதில் காணப்படுகின்றது. சுவாமி தனது வாழ்நாளில் பல சேவைகளை மேற்கொண்டார். அவர் ஆரம்பித்த வைத்தியசாலைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பல சமூக சேவை நிலையங்கள் மக்களுக்கு மிகுந்த பலனை வழங்கிக் கொண்டிருக்கின்றன. எந்தவொரு வெகுமதியையும் எதிர்பார்க்காமல் நாம் சமூகத்திற்கு நேர் மறையான பங்களிப்பை வழங்க வேண்டும் என்று சுவாமியின் இச் செய்தியானது எம்மை ஊக்குவிக்கின்றது. அன்பே பிரசன்னத்தில் மிகவும் சக்தி வாய்ந்த பெரும் சக்தி என்றும் ஒருவரின் தெய்வீக இயல்பை உணர்ந்து கொள்வதற்கான பாதை என்றும் பகவான் போதிக்கின்றார். அனைத்து உயிர்களின் மீதும் அன்பு மற்றும் கருணை காட்டுவது மனிதனின் தெய்வீகத்தன்மையின் வெளிப்பாடாகும். இவற்றினை பின்பற்றி அன்றாட வாழ்வில் அன்பினை வளர்க்கும்படி சுவாமி தனது வாழ்க்கையின் மூலம் வலியுறுத்துகின்றார். பகவான் தனது வாழ்நாளில்பல சமூக சேவைகளை மேற்கொண்டார். அன்பின் வழியில் சேவை செய்வது அவரின் முக்கிய போதனையாகும். மேலும் பகவான் அனைத்து மதங்களின் ஒற்றுமையை ஆதரிக்கின்றார். ஒரே ஜாதி- மனித குலம், ஒரே மதம்- அன்பு மதம், ஒரே மொழி- இதயத்தின் மொழி. கடவுளை கோயில்களிலோ தேவாலயங்களிலோ மசூதிகளிலோ காண்பதை விட மனிதனின் மனதில் காணலாம்.

சத்ய சாயி பாபாவின் போதனைகள் மனிதன் தன்னை அறிதல் (சுய விசாரணை மூலம் உயர்ந்த அறிவையும் ஞானத்தையும் தேடுவதற்கு ஊக்குவிக்கின்றது. அவரது போதனைகள் அவரது வாழ்க்கை வரலாறு மனதில் பகுத்தறிவு, ஒழுக்கம் மற்றும் இறை ஞானத்தை வளர்க்கத் தூண்டுகின்றது. இதன் மூலம் ஆன்மிகப் பயணங்களைத் தொடங்க வழிகாட்டுகின்றது.

மேலும் பகவான் தெய்வீக போதனைகளின் அடிப்படையில் மக்களிற்கு பலபாகங்களில் அளப்பரிய வகையில் வழிகாட்டுகின்றார். அவ்வாறானவற்றில் சத்திய சாயி ஆன்மீகக்கல்வி மற்றும் சத்திய சாயி விழுக்கல்வியும் ஒன்றாகும். இக்கல்வியானது தெய்வத்தின் மீது நம்பிக்கையை மேம்படுத்தவும் (தெய்வ) ப்ரீதி), பாவம் செய்வதற்கு பயம் கொள்ள வும் (பாப பீதி), மற்றும் சமுகத்துடன் ஒன்றிணைந்து வாழவும் (சமூக நீதி) கொண்டமைந்தது. இம் மேன்மையான கொள்கைகளை இப்பாடத்திட்டத்திலே குழந்தைகளில் விதைக்கபடுவதற்காக பகவானினால் உருவாக்கப்பட்டுள்ளது.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் பிறப்பு உலகத்திற்கு மிக முக்கியமானதொன்றாகும். அவரது போதனைகள் மற்றும் வாழ்க்கை வரலாறு மக்களில் பெரிய மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது என்பதில் ஐயமில்லை. அவரது பிரசன்னத்தின் நோக்கம் எப்போதும் மக்களிற்கு வழிகாட்டியாக இருக்கின்றது. கலியுகத்தில் வாழ்க்கைச் சிக்கல்களை நீக்க பகவானின் ஞானம் ஒளியாக வழிகாட்டுகின்றது.

"ஸமஸ்த லோகா சுகினோ பவந்து"

திருமதி. சுதர்சினி சத்தியரூபன்,
(விஞ்ஞானபீடம்)
யாழ்பல்கலைக் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேய்பிறை அட்டமி

தலையாழி சாமுண்டா தேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் தேய்பிறை அட்டமி உற்சவம் இன்று மாலை வசந்த மண்டப பூஜையுடன் இடம் பெற வுள்ளது. இதன் போது நெய் விளக் கேற்றலுடன் சகஸ்ர நாம அர்ச் சனையும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையின் செய லாளர் அறிவித்துள்ளார். (6-8)

## நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உப அலுவலகம் ஆதன பெயர் மாற்றம்

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட கொக்குவில் உப அலுவலகத்தின் 5 வட்டாரத்தின் ஆதன இல 23/04, பிரம்படி 2 ஆம் வீதி ஆதனப்பதிவேட்டில் S.நல்லதம்பி பெண் ராசாத்தி என்ற பெயரில் காணப்படுகின்றது. இவ் ஆதனத்தை துவாரகன் பெண் திபர்ணா என்பவர் தனது பெயருக்கு ஆதனபெயர்மாற்றம் செய்ய விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்

**உறுதியின் விபரம்**

பிரசித்த நொத்தாரிசு ஸ்ரீதரன் அம்பிகா அவர்கள் முகதாவில் 626 ஆம் இலக்கத்தில் 11.09.2018 ஆம் திகதிய சீதன உறுதியின்படி நிலபரப்பு 01 குளி 2.35 அளவு கொண்ட ஆதனத்தை ஆதனபெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் V.தவராஜா அவர்களினால் 5435 ஆம் இலக்கத்தில் 21.02.2024 ஆம் திகதி அளந்து வரைந்த படத்தின்படி நில பரப்பு 01 குளி 2.00 ஆகும்.படத்தின் படி எல்லைகள் கிழக்கு - கையொழுங்கை முகப்பும் கந்தசாமி புனிதவதியின் ஆதனமும் வடக்கு- தயாளரத்தினம் பெண் சிந்தாமணியின் ஆதனம் மேற்கு - தியாக ராசா பெண் திலகவதிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு-மாணிக்கவாசகர் பெண் பரிஞானத்தின் ஆதனம். இதிலடங்கும் இன்னும் கிழக்கெல்லைக் கையொழுங்கைக்கும் வடக்கேயிருக்கும் கிணற்றில் பங்கும் வழமையான வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் இதனைச் சேர்ந்தவைகளும்.

இவ்வாதனம் உறுதியில் சீதனமென குறிக்கப்பட்டாலும் அது ஓர் வெளிப்படுத்தல் சாதனமாகவே காணப்படுகின்றது. ஆதனப் பெயர்மாற்று செயற்பாடுகளானவை சட்டதீர்வானதும் வெளிப்படைத்தன்மை கொண்டதும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடாக காணப்படுதல் அவசியமாகும். எனவே ஆதனபெயர்மாற்று விண்ணப்பதாரி பெயர் மாற்றவிண்ணப்பத்திற்கு சமர்பிக்கப்பட்ட உறுதியான வெளிப்படுத்தல் சாதனமாக ஏற்றுக்கொண்டதற்கமைவாகவும் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் ஆதன பெயர்மாற்றம் மேற்கொள்ள தனது சுயமான விருப்பத்தை தெரிவித்ததன் பிரகாரமும் இவ்வாதனம் தொடர்பான விபரங்கள் செய்தியாக பிரசுரிக்கப்படுகின்றது.

மேற்படி விபரங்களை வெளிப்படுத்தி துவாரகன் பெண் திபர்ணா என்பவர் ஆதனப்பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இவ்வாதனம் தொடர்பான உரித்தாளர்கள் வேறு யாராவது காணப்பட்டால் தங்களது ஆட்சேபனைகளை பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமாக ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வெளிநாட்டில் வசிப்பவர்களாயிருந்தால் இங்குள்ள உறவினர் மூலமாகவோ தங்களது ஆட்சே பனைகளை செயலாளர் நல்லூர் பிரதேசசபை என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். யாரும் ஆட்சேபனைகள் தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரரானது துவாரகன் பெண் திபர்ணா என்பவரின் பெயருக்கு ஆதனபெயர்மாற்றம் மேற்கொள்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி ஆகாது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம். (சட்டபூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பிக்காத அனைத்து முறைப்பாடுகளையும் நிராகரிக்கும் அதிகாரம் நல்லூர் பிரதேசசபைக்கு உண்டு என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்)

**செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.** (சி-1633)

## நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உப அலுவலகம் ஆதன பெயர் மாற்றம்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் உப அலுவலகத்தில் உள்ள ஆதனப்பதிவேட்டில் 16 ஆம் வட்டாரத்தில் இல 15, மிஷன் பாடசாலை வீதி எனும் ஆதனம் ஆதனப்பதிவேட்டில் T.சரஸ்வதி உ.கேர் T.சுந்தரம் த/சொ S.சதாநாதன் என்ற பெயரில் காணப்படுகின்றது. இவ்வாதனத்தை சதானந்தன் தர்மேஷ் மற்றும் சுந்தரம் சதானந்தன் என்பவர்கள் தங்களது பெயருக்கு ஆதனபெயர்மாற்றம் செய்ய விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள்.

**உறுதியின் விபரம்**

பிரசித்த நொத்தாரிசு N.தம்பிமுத்து அவர்கள் முகதாவில் 13231 ஆம் இலக்கத்தில் 17.08.2023 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதியின்படி நிலப்பரப்பு 02 குளி 0.75 அளவு கொண்ட ஆதனத்தை ஆதனபெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் B.பிரணவன் அவர்களினால் 1825 ஆம் இலக்கத்தில் 19.10.2023 ஆம் திகதி அளந்து வரைந்த படத்தின்படி நிலபரப்பு 01 குளி 16.00 ஆகும். படத்தின்படி எல்லைகள் கிழக்கு - சின்னப்பு சண்முகத்தின் ஆதனமும் வடக்கு - ஒழுங்கை மேற்கு - கையொழுங்கை தெற்கு - தம்பு சுந்தரம் பெண் செல்லமுத்துவின் ஆதனம் இதிலடங்கும்.

இவ்வாதனம் ஓர் வெளிப்படுத்தல் சாதனமாகவே காணப்படுகின்றது. ஆதனப் பெயர்மாற்று செயற்பாடுகளானவை சட்டதீர்வானதும் வெளிப்படைத்தன்மை கொண்டதும் பொறுப்பு வாய்ந்த செயற்பாடாக காணப்படுதல் அவசியமாகும். எனவே ஆதனபெயர்மாற்று விண்ணப்பதாரி பெயர் மாற்ற விண்ணப்பத்திற்கு சமர்பிக்கப்பட்ட உறுதியான வெளிப்படுத்தல் சாதனமாக ஏற்றுக்கொண்டதற்கமைவாகவும் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் ஆதனப்பெயர்மாற்றம் மேற்கொள்ள தனது சுயமான விருப்பத்தை தெரிவித்ததன் பிரகாரமும் இவ்வாதனம் தொடர்பான விபரங்கள் செய்தியாக பிரசுரிக்கப்படுகின்றது.

மேற்படி விபரங்களை வெளிப்படுத்தி சதானந்தன் தர்மேஷ் மற்றும் சுந்தரம் சதானந்தன் என்பவர்கள் ஆதனப்பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவ்வாதனம் தொடர்பான உரித்தாளர்கள் வேறு யாராவது காணப்பட்டால் தங்களது ஆட்சேபனைகளை பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வெளிநாட்டில் வசிப்பவர்களாயிருந்தால் இங்குள்ள உறவினர் மூலமாகவோ தங்களது ஆட்சேபனைகளை செயலாளர் நல்லூர் பிரதேசசபை என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். யாரும் ஆட்சேபனைகள் தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரரான சதானந்தன் தர்மேஷ்மற்றும் சுந்தரம் சதானந்தன் என்பவர்களின் பெயருக்கு ஆதனப்பெயர் மாற்றம் மேற்கொள்ளப்படும். ஆதனப் பெயர் மாற்றம் மேற்கொள்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி ஆகாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன். (சட்டபூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பிக்காத அனைத்து ஆட்சேபனைகளும் நிராகரிக்கும் அதிகாரம் நல்லூர் பிரதேசசபைக்கு உண்டு. என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்)

**செயலாளர், நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்.** (சி-1634)

## 34 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 06 . 10 . 1927

இறப்பு 23 . 11 . 1990

### அமரர். சண்முகம் ஞானப்பிரகாசம்


யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்ற ஸ்தாபகரும், இணைப்பதிகாரியும் யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவு சங்கங்களின் சமாச முன்னாள் தலைவரும், ஓய்வு பெற்ற சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருமான அமரர். சண்முகம் ஞானப்பிரகாசம் அவர்களின் சேவையினை நன்றியுடன் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.


(567)

276, அரசடி வீதி,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,அங்கத்தவர்கள்,
யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.

## நீங்கா நினைவுகளில் இருபத்தொன்பது ஆண்டுகள்





**கனகசபை சண்முகசுந்தரம் (சோமு)**
(ஸ்தாபகர்,சிவன் மோட்டோர்ஸ் ஸ்டோர்ஸ்)

**சண்முகசுந்தரம் சிவரூபன்(டீயூக்கோ)**
(மாணவன்-யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி)

பிறப்பு-03.11.1941 | மறைவு 23.11.1995 | பிறப்பு-18.08.1983

இருபத்தொன்பது வருடங்கள் உருண்டோடி நீண்டாலும்
இருவரதும் உருவங்கள் எங்களுள் உலாவுவதை
பெருமையுடன் நீவிர் பொறுமையுடன் வாழ்ந்ததை
மறவாது மனத்தால் மௌனமாய் நினைக்கின்றோம்

(563)

"துர்க்கா இல்லம்"
இல.29, ஒட்டுமடம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவுகளுடன்
வாழும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்றுத்தாச்சி பசுமாட்டினை வெட்டியவர்கள் தப்பியோட்டம்

## ஊர்காவற்றுறையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ், ஊர்காவற்றுறை பகுதியில் கன்றுத் தாச்சி பசு மாடொன்றினை இறைச்சிக்காக வெட்டியவர்களை ஊர்மக்கள் மடக்கி பிடிக்க முற்பட்ட வேளை தப்பி சென்றுள்ளனர்.

இந்நிலையில் அவர்களின் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சுமார் 200 கிலோ எடையுடைய மாட்டிறைச்சியும் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

சுருவில் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை உயர் ரக கேப்பை இன கன்றுத் தாச்சி பசு மாட்டினை கடத்திச் சென்று ஆட்கள் அற்ற இடத்தில் அதனை வெட்டி வயிற்றினுள் இருந்த கன்றினை வெளியே வீசி விட்டு இறைச்சியை துண்டுகளாக வெட்டிக் கொண்டிருந்த வேளை அதனைக் கண்ட ஊர் மக்கள் அந்த நபர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்ட வேளை, தமது மோட்டார் சைக்கிள் இறைச்சி என்பவற்றை கைவிட்டு விட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள், இறைச்சி என்பவற்றை மீட்டு பொலிஸ் நிலையம் எடுத்து சென்றுள்ளனர்.

தொடர்ச்சியாக தீவகப் பகுதிகளில் மாடுகளை இறைச்சிக்காக வெட்டும் சட்டவிரோத நடவடிக்கை அதிகரித்துச் செல்வதனால் அதனை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (6-8-33)

## கரைச்சி பிரதேச சபை - கிளிநொச்சி
## 2025 ஆம் ஆண்டுக்கான வரைவு வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்கு

கரைச்சி பிரதேச சபையின் 2025 ஆம் ஆண்டுக்கான வரைவு வரவு செலவுத்திட்டம் பொதுமக்கள் பார்வைக்காக 2024.11.22ஆம் திகதி தொடக்கம் 2024.12.05ஆம் திகதி வரை கரைச்சி பிரதேச சபை தலைமை அலுவலகம், உப அலுவலகம் கிளிநொச்சி, உப அலுவலகம் முரசுமோட்டை மற்றும் சபையின் நூலகங்களான கிளிநொச்சி, வட்டக்கச்சி, முரசுமோட்டை, ஸ்கந்தபுரம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருமானங்கள், செலவீனங்கள் தொடர்பான விபரங்களும். மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் பார்வையிட்டு அபிப்பிராயங்கள் இருப்பின் செயலாளர் கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவோ 2024.12.06 ஆம் திகதிக்கு முன்னர் தெரிவிக்க முடியும் என்பதனை அறியத்தருகிறேன்.

**வரைவு வரவு செலவுத்திட்ட சுருக்க அறிக்கை**

| | |
|---|---|
| **வருமானம்** | |
| சபையின் சொந்த வருமானம் | 255, 260,787.00 |
| மானியங்கள் மற்றும் மீள்நிரப்பல்கள் | 113,737,418.00 |
| மொத்த வருமானம் | 368,998,205.00 |
| **செலவினம்** | |
| மீண்டு வரும் செலவினம் | 233,888,198.00 |
| மூலதன செலவினம் | 135,109,703,00 |
| மொத்த செலவினம் | 368,997,901.00 |

**செயலாளர்,கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி.**

(சி-1637)

# தட்டாங்குளம் வீதியை புனரமைத்து தருமாறுகோரி

## மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐம்பது வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாத மீசாலை வடக்கு தட்டாங்குளம் வீதியைப் புனரமைத்து தருமாறு கோரி பொது மக்களால் தென்மராட்சி பிரதேச செயலாளர் மற்றும் வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கான மகஜர் கைதடியில் உள்ள வடக்கு மாகாண சபை அலுவலகத்தில் நேரடியாகவும்,

தென்மராட்சி பிரதேச செயலருக்கான மகஜர் கடிதம் ஊடாகவும் நேற்று முன்தினம் அப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மகஜரில் சகல அரச திணைக்களங்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களிடமும் குறித்த வீதி தொடர்பில் முறையிட்டும் இது வரை எந்தவொரு ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதுவும் நடை பெறவில்லை. ஆகவே தயவு செய்து எமது பிரதேசத்துக்குப் பொறுப்பாளர் என்ற வகையில் இதற்கு தாங்கள் நிரந்தர தீர்வை முன் வைக்க வேண்டும் - என்றுள்ளது. (6-8)

# மன்னார் கடலில் மிதந்து வந்த பொதி வெடித்ததில் 2 மீனவர்கள் படுகாயம்

(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சௌத்பார் கடற்பரப்பில் நேற்று முன் தினம் மதியம் மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் இருவர் கடலில் மிதந்து வந்ததாக கூறப்படும் பொதியை சோதனையிட்ட போது குறித்த பொதி வெடித்ததில் குறித்த இருவரும் படுகாயமடைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்தவர்கள் மன்னார் பனங்கட்டு கொட்டு பகுதியை சேர்ந்த எஸ்.ரமேஷ் (வயது-37) மற்றும் ஏ. ஆரோக்கியநாதன் (வயது-37) என தெரிய வந்துள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கடலில் மிதந்து வந்த பொதியை எடுத்து தாம் சோதனை செய்த போது குறித்த பொதி வெடித்துள்ளதாக காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் வாக்கு மூலம் வழங்கி உள்ளனர். (6-8-285)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை
## பெறுகைகளுக்கான அறிவித்தல்

வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை- 2025

தலைவர், கொள்வனவுக் குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். பிரதான வளாகம் மற்றும் அறிவியல் நகர் கிளிநொச்சி வளாகங்களில் உள்ள வாகனங்களிற்கான வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவைகளுக்காக தகுதியான, தகைமை வாய்ந்த வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை நிறுவனங்களிடமிருந்து உறையிடப்பட்ட பெறுகைகளினை பின்வருமாறு கோருகின்றது.

| பெறுகை இலக்கம் | விபரம் | வாகனங்களின் எண்ணிக்கை | வேண்டப்படும் விலைமனுப் பிணை | |
|---|---|---|---|---|
| | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| UOJ/AD/MA-II/VS/J/2025 | வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு, யாழ்ப்பாணம் | 16 | 15, 000. 00 | 05.03.2025 |
| UOJ/AD/MA-II/VS/K/2025 | வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்பு, கிளிநொச்சி | 10 | 15, 000. 00 | 05.03.2025 |

**விலைக்கேள்விதாரர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் அவசியமானது**

1. மேற்படி சேவைகளுக்கான ஒரு தனிப்பட்ட நிறுவனமாக வியாபாரப் பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.
2. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் கேள்விப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.
3. குறைந்தது மூன்று (03) வருடங்கள் அரச நிறுவனங்களுக்கு வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக இருத்தல் வேண்டும்.
4. முழுமையான கேள்வி விண்ணப்பத்தினை கொள்வனவு செய்வதற்கு மீள்செலுத்தப்படாத கட்டணமாக ரூபா 3,000.00 நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில், மக்கள் வங்கிக் கணக்கிலக்கத்தில் 970000060000276 வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களிடம் சமர்ப்பித்து கேள்வி விண்ணப்பத்தினை பெற்றுக்கொள்ளலாம். (அலுவலக நாட்களில் 25.11.2024 தொடக்கம் 05.12.2024 வரை மு.ப 09.00 தொடக்கம் பி.ப 15.00 மணிவரை)
5. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் மூல/ பிரதி (Original/ Duplicate) ஆவணங்கள் என தனித்தனியே பொதியிட்டு அக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை-2025"** எனத் தலைப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, த.பெ.இ - 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது நேரடியாக 06.12.2024 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் அல்லது கையளித்தல் வேண்டும்.

❖ கேள்வி மனுவிற்கான முன் கூட்டம் (Pre Bid Meeting)

| | | |
|---|---|---|
| திகதி: 02.12.2024 | நேரம்: 02:00pm | இடம்: பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

❖ ஏலத் திறப்பு (Bid Opening)

| | | |
|---|---|---|
| திகதி: 06.12.2024 | நேரம்: 02:00pm | இடம்: பிரதான சபா மண்டபம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். |

**கேள்வி மனுவிற்கான முன் கூட்டம் மற்றும் ஏலம் திறக்கப்படும்போது ஏலதாரர் அல்லது அவர் சார்பிரதிநிதிகளில் ஒருவர் சமூகமளிக்கலாம்**

தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினை அலுவலக நேரங்களில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் பொதுநிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி இலக்கம் 021 222 6517, Fax:- 021 222 6517 )

**தலைவர், பெறுகைக்குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,** (C-1536)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் விலங்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கையில் பயிர்களுக்கு குறிப்பிடத்தக்க சேதத்தை ஏற்படுத்தும் தீங்கு விளைவிக்கும் விலங்குகளின் பிரச்சினைக்கு தீர்வு காண, விவசாயம், கால்நடைகள், நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சு, ஒரு சிறப்புப் பிரிவை நிறுவியுள்ளது.

இந்த முயற்சியானது நிலையான கட்டுப்பாட்டுக்கான பல உபாயங்களை செயற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் அமைச்சர் கே.டி.லால்காந்த தலைமையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

தேங்காய் மற்றும் பழங்கள் போன்ற முக்கிய பயிர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தும் டோக் குரங்குகள் மற்றும் பிற விலங்குகளை கட்டுப்படுத்த நிலையான நடவடிக்கைகளை அடையாளம் காண்பது குறித்து, இந்த கலந்துரையாடல் கவனம் செலுத்தியது.

இந்நிலையில், உடனடி மற்றும் செயற்படக்கூடிய வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான திட்டங்கள் கலந்துரையாடலின்போது பேசப்பட்டுள்ளன. (நி-8)


## நல்லூர் பிரதேச சபை
## உள்ளூர் அதிகாரசபைக்கான அபிவிருத்தித்திட்டம்

2185/74 ஆம் இலக்க 2023.07.24ஆம் திகதிய வர்த்தமானி பிரசுரிப்பின் மூலம் 1978ஆம் ஆண்டின் நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்ட இல 41இன் கீழ் நல்லூர் பிரதேச சபையானது நகர அபிவிருத்திப் பகுதியாக வெளிப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட நல்லூர் பிரதேச சபைக்கான அபிவிருத்தித் திட்டம் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் முகமாக சபையின் தலைமை காரியாலயம், கொக்குவில் உப அலுவலகம், நல்லூர் உப அலுவலகம் மற்றும் கொக்குவில் பொதுநூலகம் என்பவற்றில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், சபையின் இணையத்தளத்திலும் (www.nallur.ps.gov.lk) முகநூல் பக்கத்திலும் (https://www.facebook.com/NallurPradeshiya Sabhaa) மென்பிரதியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.


ஆர்வமுள்ள மற்றும் சபை அபிவிருத்தியில் அக்கறையுள்ள தரப்பினர் மேற்படி திட்டத்தினை பார்வையிட்டு அது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களினை எதிர்வரும் 2025.01.21 ஆம் திகதிக்கு முன்னராக எழுத்துமூலம் சபையின் தலைமை அலுவலகத்திலோ அல்லது மின்னஞ்சல் ஊடாகவோ (npsnallur@gmail.com) அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். இது சபை ஆளுகைப் பிரதேசத்தின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான முக்கிய விடயம் என்பதனால் அதிக முன்னுரிமை வழங்கி தங்களால் வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பில் தெளிவான விபரங்களையும் தங்களுடைய தொடர்பு விபரங்களையும் இணைத்து அனுப்பி வைப்பது பயனுறுதியாக அமையும் எனக்கருதுகின்றேன்.

செயலாளர், நல்லூர் பிரதேச சபை 23.11.2024

(சி-1635)



## மணிவிழா வாழ்த்து



திரு.சு.மோகனராஜன்
(அதிபர்,யா/கோப்பாய் மகாவித்தியாலயம்)

23.11.2024 இன்று அதிபர் பணியில் இருந்து ஓய்வு பெறும் அதிபர் திரு.சு.மோகனராஜன் அவர்களிற்கு மணிவிழா வாழ்த்துக்களையும் பிறந்த தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
கோட்டக்கல்விப் பணிப்பாளரும் அதிபர்கள் சங்கமும், கோப்பாய்க் கல்விக் கோட்டம்.

(C-1611)



## மணிவிழா வாழ்த்து



செல்வி.
சந்திரிக்கா கணேஸ்பரன்
(இசைக்கலைமணி, சங்கீத கலாவித்தகர், பண்ணிசைக் கலாவித்தகர், சிதம்பரஜோதி)

அர்ப்பணிப்புடன் 35 வருடங்களுக்கு
மேலாக அரும்பணியாற்றி மணிவிழாக்காணும்
இப் பொன்னாளிலே அவர் தம் சேவையினை
உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்
கற்ற கல்வியினை கடவுட் பணியாக்கி
எண்ணிலா மாணவர்கட்கு எளிதாய்
போதித்து அன்புடன் இசைபாடி மகிழ்ந்த
எம் ஆசிரியர் மங்காப் புகழுடன் ஒளி வீசி
குறைவற்ற செல்வமும்
நீண்ட ஆயுளும் புகழும் பெற்று
பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றோம்
வாழ்க பல்லாண்டு வாழிய வாழியவே

மணிவிழா நாயகியைப் பாராட்டி வாழ்த்த அன்புடன் அழைக்கின்றோம்

காலம்
24.11.2024- பிற்பகல் 3.30 மணி
இடம்
குபேர மஹால் திருமணமண்டபம், சுதுமலை.

(2473)

மாணவ மணிகள் மற்றும் ஆசிரிய நண்பர்கள்


## இராசிபலன்

23.11. 2024
கார்த்திகை 08, சனிக்கிழமை
அட்டமி முன்னிரவு 11.36 மணிவரை

மகம் முன்னிரவு 11.24 மணிவரை
சுபநேரம் -3.11-4.41 மணிவரை
இராகுகாலம் 9.11-10.41 மணிவரை

ஆறுமுகநாவலர் குருபூசை
சந்திராஷ்டமம் - பூராடம்,உத்தராடம்.

வளவன்

**மேஷம்:** அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**ரிஷபம்:** தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, வழிபாடு காரிய வெற்றிதரும், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்:** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்:** நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, உங்களின் கருத்துக்களுக்கு மரியாதை கிடைக்கும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** அனுபவத்தின் வாயிலாகப் பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை,திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சேமிப்பு உயரும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு:** குடும்பத்தினர்,நண்பர்களிடையே ஏற்பட்ட மனஸ்தாபம் விலகும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.

**மகரம்:** சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், ரோக பயமுண்டு.

**கும்பம்:** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், போசன சுகமுண்டு.

**மீனம்:** உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்.


வறுமையில் நிறைவு காண்பவனே உண்மையான பணக்காரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் பாகம் - 3 (638)



அதுபோல் தேவி தங்களுடைய கருணையினால் நானும் ஒரு நரியானேன். ஒளிந்து மறைந்தும், தந்திர மந்திரம் செய்தும், இல்லாதது பொல்லா ததைச் சொல்லியும் பகைவர்களிடமிருந்து தப்பிவர வேண்டியதாயிற்று. அரசிளங்குமரி! இந்த வேலையை இனிச் செய்ய என்னால் முடியாது! விடை கொடுங்கள்."

ஐயோ! என் பிராண சிநேகிதி என்று எண்ணியிருந்த வானதி என்னை கைவிட்டுப் போகப் பார்க்கிறாள். நீருமா என்னைக் கைவிட்டுப் போய்விட எண்ணுகிறீர்?"

"தேவி! கொடும்பாளூர் இளவரசிக்கும் தங்களுக்கும் உள்ள விவகாரத்தைப் பற்றி நான் அறியேன். ஆனால் நான் எப்படித் தங்களைக் கைவிட முடியும்? இராஜாதி ராஜாக்கள் தங்களுடைய மணிப் பொற்கரத்தைக் கைப் பற்றத் தவம் கிடக்கிறார்கள். நானோ குற்றேவல் செய்ய வந்தவன்."

இளையபிராட்டி அப்போது தன்னுடைய திருக்கரத்தை நீட்டினாள். இது கனவா, நனவா என்ற தயக்கத்துடன் வந்தியத்தேவன் அந்த மலர்க் கரத்தைத் தன் இரு கைகளாலும் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டான். அவனுடைய உள்ளமும் உடம்பும் பரவசமடைந்தன.

வாணர் குலத்து வீரரே! கற்பென்னும் திண்மையைக் குலதனமாகப் பெற்ற பழந்தமிழ் மன்னர் வம்சத்தில் வந்தவள் நான். எங்கள் குலத்து மாநகரில் சிலர் கணவனுடன் உடன் கட்டை ஏறியதுண்டு. பதியின் உடலை எரித்த தீயைக்குளிர்ந்த நிலவென்று அவர்கள் கருதி அக்கினியில் குதித்தார்கள். கேள்விப்பட்டிருக்கிறேன், தேவி!

உமது கரத்தைப் பற்றிய இந்த என் கரம் இன்னொரு ஆடவனுடைய கையை ஒரு நாளும் பற்றாது.

வல்லவரையன் சொல்லிழந்து செயலிழந்து குந்தவையின் கண்ணீர் ததும்பிய கண்களைப் பார்த்த வண்ணம் மதியும் இழந்து நின்றான்.

ஐயா உம்முடைய பதற்றமான காரியங்களினால் உமது உயிருக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்தால் என்னுடைய கதி என்ன ஆகும் என்பதைச் சிறிது எண்ணிப் பாரும்.

தேவி! தங்களுடைய இதய சிம்மாசனத்தில் இடம்பெற்ற இந்தப் பாக்கியசாலி உயிருக்குப் பயந்த கோழையாயிருக்க முடியுமா?

"கோழைத்தனம் வேறு, ஜாக்கிரதை வேறு ஐயா! முதன் மந்திரி அநிருத்தருக்குக் கூடத் தங்கள் வீரத்தைப் பற்றி ஐயம் கிடையாது." பின்னர் எதைப்பற்றி அவர் ஐயப்படுகிறார்.

"நீர் பழுவூர் ராணியின் ஒற்றனாயிருக்கலாம் என்று ஐயுறுகிறார்." அப்படியானால் வைத்தியர் மகன் பினாகபாணிக்கு அளித்த மறுமொழியை அவருக்கும் அளிக்கச் சித்தமாயிருக்கிறேன். சிறைக்கதவைத் திறந்து விடுங்கள்! அந்த மனிதர் எங்கே இருக்கிறார் என்று சொல்லுங்கள்!"

"வைத்தியர் மகனாவது மற்போரில் சிறிது பழக்கமுள்ளவன். அநிருத்தர் சொற்போர் அறிவாரேயன்றி மற்போர் அறியார். அறிவின் கூர்மையே அவருடைய ஆயுதம். வாளின் கூர்மையை அவர் என்றும் துணை கொண்டதில்லை." அப்படியானால் என்னுடைய வாளின் கூர்மையைத்தான் முதன் முதலில் பரீட்சை பார்க்கட்டுமே? ஐயா! இந்த நாட்டில் சக்கரவர்த்திக்கு அடுத்த மரியாதைக்குரியவர் முதன் மந்திரி அநிருத்தர்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## எதிர்கால வாழ்க்கை



ஒரு நாள் முல்லா தெரு வழியாக நடந்து செல்லும் போது ஒரு குடிசையின் வாசலைக் கடந்து செல்லும் போது குடிசைக்குள் இருந்து ஏதோ ஒரு சத்தம் கேட்க உள்ளே சென்று பார்த்தார். அந்த குடிசையில் ஒரு ஏழை விதவைப் பெண்.

அவளுக்கு பத்து வயதில் ஒரு மகன் இருந்தான். அவள் துணிகளை தைத்துக் கொடுத்து தான் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறாள் என்பது முல்லாவிற்கு ஏற்கனவே நன்கு தெரியும்.

வீட்டுக்குள் தாயும் மகனும் ஏதோ சண்டை போட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்து, இங்கே என்ன நடக்கிறது? என்று முல்லா கேட்டார். அதற்கு அந்த பெண் முல்லா அவர்களே, இவன் எனது ஒரே மகன். ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போகமாட்டேன் என்று அட்ம்பிடிக்கிறான் அறிவுரை சொல்லிப் பார்த்தேன் அடித்தும் பார்த்தேன்.

ஆனால் பள்ளிக் கூடம் போகமாட்டேன் என்கிறான், என்றாள் தாய் வேதனையோடு.

தம்பி நீ பள்ளிக் கூடம் போக வேண்டியது அவசியம் என்று முல்லா சிறுவனுக்கு புத்திமதி கூறினார். நான் பள்ளிக் கூடம் போகப்போவதே இல்லை என்று அடம்பிடித்தான். முல்லா, அந்தப் பையனின் தாய் தைப்பதற்காக வைத்திருந்த விலை உயர்ந்த துணி ஒன்றை எடுத்து துண்டாகக் கிழித்து விட்டார். அதைக்கண்டு தாயும் மகனும் அதிர்ச்சியும் திகைப்பும் அடைந்தனர். அம்மா! முல்லா விலை உயரந்த துணியைக் கிழித்து விட்டாரே? என்று பையன் கேட்டான்.

பள்ளிக்கூடம் போகாததால் உன் எதிர்கால வாழ்க்கையையே பாழாகும் போது, இந்த விலை உயர்ந்த துணி பாழானது பெரிய விடயமா என்றார் முல்லா. இந்த சொற்கள் அவன் மனத்தில் பெரிய மாறுதலை உண்டாக்கிற்று. உடனே புத்தகங்களை எடுத்துக் கொண்டு பள்ளிக்கு புறப்பட்டான். அவன் சென்றபிறகு முல்லா தாம் கிழித்த துணியின் மதிப்புக்கேற்ற விலையை கொடுத்து விட்டு புறப்பட்டார்.

நீதி : சொல்லும் விதத்தில் சொன்னால் நிச்சயம் மனதில் மாற்றம் நிகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான எண்ணங்களால் உங்களைச் சுற்றி அரண் அமைத்துக் கொள்ளுங்கள்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியலமைப்பு மாற்றமே தமிழர்களுக்குத் தீர்வு எனில்...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு நிறைவேற்று அதிகாரத்துடன் பாராளுமன்ற அதிகாரத்தையும் மக்கள் மனமாக வழங்கியுள்ளனர்.

இனி இந்த நாட்டின் எதிர்காலத்தை நல்ல முறையில் கொண்டு செல்கின்ற கடமையும் பொறுப்பும் ஜனாதிபதி அநுரவுக்கு உண்டு.

அந்தவகையில், பத்தாவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வில் கொள்கைப் பிரகடன உரையையாற்றிய ஜனாதிபதி அநுர; இனி இலங்கையில் இனவாதத்துக்கோ மதவாதத்துக்கோ இடமில்லை என ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

இனி இங்கு இனவாத மதவாதத்துக்கு இடமில்லை என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறுவதில் **இனி** என்ற சொற்பதம் எதைக் குறிக்கிறது என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

அதாவது **இனி** என்பது ஜனாதிபதி அநுரவின் ஆட்சிக்காலமாகிய ஐந்து வருடத்தைக் குறிக்குமா? அல்லது **இனி** என்பது எக்காலத்திலும் இனவாதம் மதவாதம் இருக்காது என்பதைக் குறித்து நிற்கிறதா? என்பதுதான் இங்கு கவனிக்கப்பட வேண்டும்.

அடுத்துவரும் ஐந்து வருடங்களை மட்டும் ஜனாதிபதி அநுர கூறுவாராக இருந்தால், ஆட்சி மாற்றம் என்பது அர்த்தமற்றதாகிப் போகும்.

ஆக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறுகின்ற **இனி** என்பது எக்காலத்திலும் இலங்கைத் திருநாட்டில் இனவாதத்துக்கோ, மதவாதத்துக்கோ இடமில்லை என்றே பொருள் கொள்ள வேண்டும். அப்படியானால் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது அவசியமாகிறது.

ஆம், இங்கு ஜனாதிபதி அநுர கூறுகின்ற இனவாதம் மதவாதம் என்பது சிங்கள பௌத்தம் என்பதைக் குறிப்பதாகும்.

அதாவது சிறுபான்மை இனம் என்ற ஒரே காரணத்துக்காக இந்த நாட்டில் காலத்துக்கு காலம் தமிழ் மக்கள் பேரினவாதிகளால் வதைபட்டுள்ளனர்.

எனவே ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு வேண்டியதெல்லாம் உரிமையும் சுதந்திரமுமாகும். எனவே இங்கு தமிழ் மக்களின் உரிமை நிலைநாட்டப்பட வேண்டும்.

இந்த நாட்டில் சிங்கள மக்கள் எவ்வாறு அனைத்து உரிமைகளுடனும் வாழ்கின்றார்களோ அதேபோன்று தமிழ் மக்களும் அனைத்து உரிமைகளுடனும் தம்மைத்தாமே ஆளுகின்ற அதிகாரத்துடனும் வாழ்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியமாகிறது.

இங்குதான் அரசியலமைப்பை மாற்றுவதன்மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என ஜனாதிபதி அநுர நம்புகிறார்.

அதாவது புதிய அரசியலமைப்பின் மூலம் இந்த நாட்டில் இனவாதத்தை – மதவாதத்தை இல்லாதொழிக்க முடியும் என்பது ஜனாதிபதி அநுரவின் நம்பிக்கை.

அந்த நம்பிக்கை ஏற்புடையதாக இருக்க வேண்டுமாயின், அரசியலமைப்பு மாற்றத்தில் தமிழ்த் தரப்புகளின் வகிபங்கும் அவசியமாகும்.

இதைவிடுத்து 1972இல், 1978இல் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு போல புதியதும் இருக்குமாயின், ஜனாதிபதி அநுர அல்ல அந்த ஆண்டவன் வந்தாலும் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த முடியாமல் போகும் என்பது நிறுதிட்டமான உண்மை.

### பெரும் போகத்துக்கு
## உரமானியத்திற்கான முதற்கட்ட நிதி திறைசேரியிலிருந்து விடுவிப்பு

பெரும்போகத்துக்கு உரமானியத்திற்கான முதற்கட்டநிதி திறைசேரியிலிருந்து பெறப்பட்டுள்ளதாக கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம் ரோஹன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதன்படி 678.06 மில்லியன் ரூபாய் திறைசேரியிலிருந்து பெறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த உரமானியத்தின் கீழ் விவசாயிகளுக்கு முதல் கட்டமாக 15 ஆயிரம் ரூபாயும், 2ம் கட்டமாக 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி மொத்தமாக 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என கமநல சேவைகள் ஆணையாளர் நாயகம் ரோஹன ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## 70 வயதைப் பூர்த்தி செய்தோருக்கு ரூ.3 ஆயிரம் கொடுப்பனவு

அஸ்வெஸ்வம நலன்புரி கொடுப்பனவு பெறும் குடும்பங்களில் 70 வயதைப் பூர்த்தி செய்த முதியோர்களுக்கான கொடுப்பனவான 3 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த உதவித்தொகை இந்த மாதம் முதல் அஸ்வெசும பெறும் முதியவர்களின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படவுள்ளது.

நலன்புரி நன்மைகள் சபை இதனைத் தெரிவித்துள்ளது. (ம-7)

### 7 மணி நேரம்
## பிள்ளையானிடம் வாக்குமூலம்

வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்த பிள்ளையான் எனப்படும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் சுமார் 7 மணித்தியாலங்கள் வாக்குமூலம் பெறப்பட்டது.

இரண்டாவது நாளாகவும் நேற்றுக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சி தயாரித்த விசேட காணொளித் தொகுப்பு ஒன்றில் சிவநேசதுரை சந்திரகாந்தனின் முன்னாள் செயலாளரான அசாத் மௌலானா என்பவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### நல்லை நகரில்
## நாவலர் பெருமான் நினைவு வைபவம்

ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படுபவரும், சைவமும், தமிழும் காத்த தனிப்பெருந் தலைமகனுமான நல்லைநகர் நாவலர் பெருமானின் நினைவு வைபவமானது இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய நிர்வாகசபையின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய தலைவரும், சிவபூமி அறக்கட்டளையின் தலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறைப் பாராயணம், கூட்டுப் பிரார்த்தனை, பேச்சு என்பன நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா "நாவலர் பெருமானின் வாழ்வும் வளமும்" எனும் தலைப்பில் சிறப்புரை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம் பெற்று அடியவர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். (ம-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை 01 - 30, 2024**

**"குடிமக்கள் செய்யக் கூடிய சிறிய பணிகளே பெரிய மாற்றங்களை உண்டு பண்ணும். என்னால் செய்யக் கூடிய சிறிய பணி மரங்களை நடுவது தான்."**

வங்காரி மாதாய்
(அமைதிக்கான நோபல் விருது பெற்ற கென்யாவின் பசுமைப் போராளி)

## சைவ பரிபாலன சபையில் ஆறுமுக நாவலர் பெருவிழா

சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் சைவத்தின் காவலர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருவிழா இன்று சனிக்கிழமை காலை 09 மணி முதல் யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள சைவ பரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலன சபையின் உப தலைவரும், தென்மராட்சி உதவிக்கல்விப் பணிப்பாளருமான பி.என்.சுதர்சன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.ராஜசீலன் ஜமுனா பிரதம விருந்தினராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைப் பேராசிரியர். சயனொளிபவன் முகுந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-7)

## இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது நேற்று முறையே 286.44 ரூபாவாகவும், 295.45 ரூபாவாகவும் உள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை பெறுமதியானது முறையே 286.54 ரூபாவாகவும், 295.55 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

ஏனைய பிரதான வெளிநாட்டு நாணயங்களின் பெறுமதிக்கு நிகராகவும் ரூபாவின் பெறுமதி நேற்று அதிகரித்துள்ளது.

எனினும், மத்திய கிழக்கு நாடுகளின் நாணயங்களுக்கு நிகராக ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சி கண்டுள்ளது. (ம-7)

### இலங்கை – சிங்கப்பூர் இடையே
## நேரடி புதிய விமான சேவை ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான நேரடி புதிய விமான சேவை நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த விமான சேவையை சிங்கப்பூரைத் தளமாகக் கொண்ட Jetstar Asia விமான நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

அதன்படி சிங்கப்பூரின் சாங்கி விமான நிலையத்திலிருந்து புதிய விமான சேவையின் முதல் விமானமான Jetstar Asia விமான நிறுவனத்திற்குச் சொந்தமான 3K333 என்ற விமானம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை இலங்கையை வந்தடைந்தது.

ஒவ்வொரு வாரமும் காலை அல்லது மாலையில் சிங்கப்பூரிலிருந்து இலங்கை வருவதற்கு ஏர்பஸ் A320 என்ற 5 விமானங்கள் இயக்கப்படும்.

சிங்கப்பூர் வழியாக இணைபவர்களுக்குத் தேவையான தெரிவுகளையும் வழங்குகிறது என Jetstar தெரிவித்துள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம் நிரூபிக்கப்படவில்லை சந்தேக நபரை விடுவிக்கவும்

## உத்தரவிட்ட நீதிபதி இளஞ்செழியன்

(குருமன்காடு)

ஹெரோயின் வழக்கில் கைது செய்யப்பட்டவருக்கு எதிரான குற்றத்தை நிரூபிக்க தவறியமையால் நேற்று முன்தினம் சந்தேகநபரை விடுவித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பளித்துள்ளார்.

குறித்த நபர், கடந்த 2020ஆம் ஆண்டு ஆவணி மாதம், தீங்கு விளைவிக்க கூடிய 16 கிராம் 40 மில்லி கிராம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்ததற்காக வவுனியா போதைத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு வவுனியா நீதவான் நீதிமன்றில் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பில் நீதிமன்றில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், சந்தேகநபரால் பிணை விண்ணப்பம் கோரப்பட்ட போதும் அது நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த எதிரிக்கு எதிராக நீதவான் நீதிமன்றில் விசாரணைகள் நிறைவுபெற்று 2022.10.20 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் இரண்டு குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப் பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

எனினும், தான் குற்றவாளி இல்லை என சந்தேகநபர் தொடர்ந்தும் தெரிவித்து வந்துள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச தரப்பு வழக்குதொடுநரால் சந்தேகத்துக்கு அப்பால் நியாயமான ஆதாரங்களை நிரூபிக்க கூடிய குற்றச்சாட்டுக்களை முன்வைக்க தவறியமையால் நேற்று முன்தினம் தீர்ப்புக்காக தவணையிடப்பட்டிருந்தது.

இந் நிலையில் சந்தேகநபருக்கு எதிராக போதுமான ஆதாரங்கள் இன்மையால் அந் நபரை குற்றமற்றவர் என விடுவித்து மேல்நீதிமன்ற நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். (6-8-250)


# புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.
# கேள்வி அறிவித்தல்-2025

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 01.01.2025 இலிருந்து 31.12.2025 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக் கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் காலம்** :- **25.11.2024 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 29.11.2024 பிற்பகல் 1.30 மணிவரை(அலுவலக நாட்களில் மட்டும்)**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி** :- **29.11.2024 பி.ப 02.00 மணிவரை**

**கேள்வி திறக்கப்படும் திகதி** :-**29.11.2024 பி.ப 02.00 மணி**

| இல | குத்தகைவகை | மீளளிக்கமுடியாதகேள்விப் படிவகட்டணம் (NBT,VATநீங்கலாக) | மீளளிக்ககூடியகேள்வி வைப்புப்பணம் (NBT,VATநீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்தகேள்வித்தொகை (NBT,VATநீங்கலாக) |
|---|---|---|---|---|
| | புதுக்குடியிருப்பு உப அலுவலகம். | | | |
| 1 | மந்துவில் மாட்டிறைச்சிக்கடை | 2000.00 | 115,000.00 | 2,300,000.00 |
| 2 | மந்துவில் கோழிறைச்சிக்கடை | 2000.00 | 65,000.00 | 1,300,000.00 |

**நிபந்தனைகள்.**

1. கேள்விப்பத்திரங்களின் இரு பிரதிகளும் தலைவர்,பிராந்திய பெறுகைக் குழு,புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப்பெறல் வேண்டும்.
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்விகோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2024.12.04 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித் தொகையினை 6 சம பங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அம் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னைய வேலை நாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்தியபிரதி, தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. இறைச்சிக்கடைகளில் அவற்றின் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் வேண்டும்.
5. இறைச்சிவகைகள் விற்பனையில் ஈடுபடுவோர் குறித்த ஆண்டிற்கான மருத்துவ அறிக்கையை தன் வசம் வைத்திருத்தல் வேண்டும்.
6. இறைச்சிக் கடைகளின் வெளிப்புறம், உட்புறம் தூய்மையாகப் பேணப்பட வேண்டும்.
7. இறைச்சிக் கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு,ஒட்டுசுட்டான் கொல்களத்தினையே பயன்படுத்துதல் வேண்டும்.
8. இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்ட வர்த்தமானி, சுற்றுநிருபங்களுக்கு அமைவாகவும், சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாகவும் விற்பனை செய்தல் வேண்டும்.
9. இறைச்சிக் கடைகளினை குத்தகைக்கு பெறும் குத்தகைதாரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடை வாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
10. கோழி இறைச்சிக்கடை குத்தகைக்காரர்கள் கோழிகளினை உயிருடன் காட்சிப்படுத்தி விற்பனை செய்தல் வேண்டும்.
11. கொல்களத்தில் அறுக்கப்படுவதற்கான விலங்குகள் 24 மணித்தியாலங்களுக்கு முன்னர் பொது மக்களின் பார்வைக்காக சபையால் ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டு உரிய அதிகாரிகள் முன்னிலையிலேயே கொல்களத்தில் அறுக்கப்படவேண்டும்.
12. கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் எவ்வித நிலுவைக் கட்டணங்களையும் முன்னையகாலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்தத் தவறியவர்களாக அல்லது கறுப்புநிரல் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களாக இருந்தால் கேள்வியில் சித்திபெற்றாலும் அவர்களுக்கு வழங்கப்படமாட்டாது.
13. கொல்களத்தில் அறுக்கப்படும் ஆண்,பெண் மாடுகள் கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையாளரின் கடிதத்துடனேயே கொல்களத்திற்கு வெட்டுவதற்கு கொண்டுவர முடியும். அதற்கு மேலதிகமாக பெண் மாடுகளுக்கு மாத்திரம் இனப்பெருக்கத்திற்கு தகுதியற்றது என பிரதேச கால்நடை வைத்தியரினால் வழங்கப்பட்ட சான்றிதழும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்
14. அரசினாலும்,பிரதேசசபையினாலும் தொற்று நோய்கள் சம்பந்தமாக அறிவுறுத்தப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடத்தல் வேண்டும்.
15. செயலாளரினால் விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயற்படுதல் வேண்டும்.
16. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்தியபெறுகைக் குழு, புதுக்குடியிருப்புபிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**
**2024.11.23.**

**தொலைபேசி இல:-021 229 1023** email-pkipsmullai@gmail.com.

(சி-1632)


# தே.ம.ச அலுவலகம் வவுனியாவில் திறப்பு

(குருமன்காடு)

தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட தலைமை அலுவலகம் வவுனியா கித்துள் வீதியில் அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரால் குறித்த அலுவலகம் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்களாக சத்தியபிரமாணம் செய்துகொண்ட அவர்களுக்கு வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றிருந்ததுடன் நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (6-8-250)

# முத்துராஜாவின் தந்தங்களை வெட்டிக் குறைக்கதிட்டம்

(கொழும்பு)

தாய்லாந்தில் இருந்து இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டு பின்னர், திருப்பியழைக்கப்பட்ட 29 வயதுடைய பிளே சாக் சுரின் (முத்துராஜா) என்ற யானையின் தந்தங்களை வெட்டிக் குறைப்பதற்கு மருத்துவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

அதன் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்கில், தாய்லாந்து-லாம்பாங் நகரில் உள்ள, யானைகள் பாதுகாப்பு மையத்தில் உள்ள கால்நடை மருத்துவர்கள் இந்த திட்டத்தை அறிவித்துள்ளனர். யானையின் நீண்ட மற்றும் கன மான தந்தங்கள் அதன் அன்றாட நடவடிக்கைகளை பாதிக்கத் தொடங்கி யுள்ளன.

குறிப்பாக மலைகளில் செல்லும்போது அல்லது தடைகளைத் தவிர்க்கும்போது, அதன் தந்தங்கள் தரையில் இழுக்கப் படுவதைத் தடுக்கவும், தமது தலையை உயர்த்தவும், இந்த நடவடிக்கை அவசியமாவதாக தாய்லாந்து அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரும்பிராயில்...

பகுதியில் வைத்து மூன்று சந்தேக நபர்கள் 8 1/2 லீற்றர்கள் கசிப்புடன் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேகநபர்கள் மூவரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## குற்றப்புலனாய்வு...

புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களின் சிரேஷ்டத்துவத்திற்கு ஏற்ப ஆசனங்கள் ஒதுக்கப்படாததால், நேற்றுமுன்தினம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எந்த ஆசனத்திலும் அமர வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதன்போது யாழ்.மாவட்ட சுயேட்சைப் பாராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா சபையில் எதிர்க்கட்சித் தலைவருக்கு வழங்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்தார்.

பாராளுமன்ற ஊழியர் ஒருவர் வந்து எம்.பி.யிடம் இது பாரம்பரியமாக எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒதுக்கப்பட்ட ஆசனம் என்று தெரிவித்தபோதும் அவர் ஆசனத்தை விட்டு வெளியேற மறுத்துவிட்டார்.

மேலும் சுயேட்சை எம்.பி அங்கு நடந்துகொண்ட விதம் சமூக ஊடகங்களில் கூட பெரிதும் விவாதிக்கப்பட்ட நிலையில், அவருக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## அரியாலையைச்...

அவர் வீட்டில் வைத்துக் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் 32 வயதான மகன் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாக மகன் மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## மழையால்...

ஆளுநர் நா.வேதநாயகனிடம் தெரிவித்தனர்.

பருவகால மழை மற்றும் இடர் தணிப்பு முன்னாயத்தக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த வடக்கு மாகாண ஆளுநர்,

"எதிர்வரும் நாட்களில் தாழமுக்கம் ஒன்று வங்கக் கடலில் உருவாகலாம் என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது. அதன் நகர்வுப் பாதை சரியாக இன்னமும் கணிக்கப்படவில்லையாயினும், நாம் அதை எதிர்கொள்ளும் வகையில் ஆயத்தங்களுடன் இருக்கவேண்டும். பருவமழை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் - செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னதாக, எமது பிரதேசத்திலுள்ள வாய்க்கால்கள் அனைத்தும் துப்புரவாக்கப்பட்டிருக்க வேண்டும். சில இடங்களில் வாய்க்கால்களைச் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துள்ளனர்.

அவற்றை சட்ட ரீதியாக அணுகி உடனடியாக இடித்து அகற்றுங்கள். தேவையேற்படின் பொலிஸாரின் உதவியையும் பெற்றுக்கொள்ளுங்கள். ஒவ்வொரு திணைக்களங்களும் மற்றைய திணைக்களங்களைப் பார்த்துக் கொண்டிருக்காமல் உடனடியாக இந்தப் பணிகளைச் செய்யுங்கள். மேலும் பல இடங்களில் வாய்க்கால்களுக்குள், வீதிகளில் மக்கள் குப்பைகளை வீசுகின்றார்கள். அவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுப்பதுதான் வழி. பல தடவைகள் விழிப்புணர்வுகளை செயற்படுத்தியும் மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்படாவிட்டால், சட்டநடவடிக்கை ஊடாகத் தண்டிக்க வேண்டும்" என்றார்.

மேலும் எதிர்வரும் இடர் நிலைமைகளின்போது பொதுமக்கள் இடர் முகாமைத்துவப் பிரிவின் 117 என்ற இலக்கத்துக்குத் தொடர்புகொள்ள முடியும் எனவும், அதேநேரம் யாழ்.மாவட்டத்தில் 021 222 1676, 077 395 7894 என்ற இலக்கங்களுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 021 228 5330, 077 232 0528 என்ற இலக்கங்களுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 021 229 0054 என்ற இலக்கத்துக்கும், மன்னார் மாவட்டத்தில் 023 211 7117 என்ற இலக்கத்துக்கும், வவுனியா மாவட்டத்தில் 076 099 4883 என்ற இலக்கத்துக்கும் தொடர்பு கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 14 வயது...

கற்கும் நடனேஸ்வரன் தாரணி (வயது-14) என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த வட்டுக்கோட்டைப் பொலிஸார் சிறுமியின் சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரி சோதனைக்காக யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

மரண விசாரணைகளை யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## இளம் குடும்பஸ்...

(வயது-32) என்ற இரு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதில் திடீர் மாரடைப்புக் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

மரண விசாரணைகளை யாழ்.மாவட்ட மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## 3வது...

நாணய நிதியத்தின் சார்பில் சிரேஷ்ட தூதுக்குழு பிரதானி பீட்டர் ப்ரூவர் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்ததுடன் இலங்கை அரசாங்கம் சார்பில் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ உள்ளிட்ட குழுவினரும் கலந்து கொண்டனர்.

இதன்படி, சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் இடம்பெற்ற மூன்றாவது மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் வெற்றிகரமாக நிறைவடைந்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)

## மாவீரர்களின்...

முடிந்த 24,379 வீரர்களின் பெயர்களினை உள்ளடக்கிய கல்லறைகளையும் சில தகவல்களையும் உள்ளடக்கிய நினைவாலயம் இன்று மாலை 6 மணிக்கு நல்லூர் தியாக தீபம் நினைவுத் தூபிக்கு முன்பாக மாவீரர் பெற்றோர்கள், மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்படவுள்ளது.

கடந்த வருடம் முல்லைத்தீவு, நல்லூர் ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்பட்ட நினைவாலயங்களில் தங்களுடைய பிள்ளைகளின் பெயர்கள் தவறவிடப்பட்டதாக அவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் பதியப்பட்டவர்களின் கல்லறைகளையும் கொண்டதாக நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பெற்றோர்கள், உறவினர்கள் தங்கள் பிள்ளைகளின் படங்களை வைத்து அஞ்சலி செலுத்தும் வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது. (ம-7,33)


மஹஜன சம்பத — திகதி 2024.11.22 — சீட்டிழுப்பு இலக்கம் 5663 — P 8 0 4 1 5 5 — விசேட அத சம்பத P 4 1 5 5 — 187631 — 459777 — 541 — 189404 — 238

தன நிதானய — திகதி 2024.11.22 — சீட்டிழுப்பு இலக்கம் 1693 — S 02 20 44 81 S — 53483

மெகா பவர் — திகதி 22/11/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2011 — P 23 33 34 65 76 — 082088

லக்கி 7 VIP — திகதி 2024.11.22 — சீட்டிழுப்பு இலக்கம் 0489 — L 2 9 3 6 9 8 L

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3905 — சீட்டிழுப்பு திகதி 22.11.2024 — N 14 44 69 76 — N 042619

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.11.22 — சீட்டிழுப்பு இலக்கம் 972 — மீனம் 04 10 34 40 மீனம் — 194086 — 22

உத்தியோகபூர்வ முடிவுகள் — 22.11.2024 — வெற்றி வாரம் 371 — R 5 8 7 4 5 7 — 53696 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,991,322.40 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2637 — சீட்டிழுப்பு திகதி 2024.11.22 — தினம் வெள்ளிக்கிழமை — 04 31 65 70 B — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 69,919,407.20

சனிதா — திகதி 22.11.2024 — வெற்றி வாரம் 4798 — 10 33 68 70 C — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,053,306.40 — 44698

சசிரி — 562 — 22.11.2024 — வெள்ளிக்கிழமை — 12 42 45 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4349 — சீட்டிழுப்பு திகதி 22.11.2024 — தினம் வெள்ளிக்கிழமை — 04 12 43 49 — கடகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,943,873.60 — 198202

கப்ருக — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — R 21 05 66 68 69 — 1813 — 22.11.2024 வெள்ளிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.556,098,680.00

அத கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2463 — சீட்டிழுப்பு திகதி 2024.11.22 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.84,194,720.00 — 04 19 58 66 Q — 119819


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் 8 நிலப்பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. செல்லத்துரை வீதி முகப்புடன்

**1 பரப்பின் விலை 15 இலட்சம் ரூபாய் ( 15 00 000/= )**

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- உரும்பிராய் சந்தி 750m தூரம்
- உரும்பிராய் சந்தியில் இருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற்வீதி 250m தூரம்
- நன்னீர் ஊற்று, செம்மண் நிலம், நல்ல சூழல்
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 - மாலை 6.00 வரை

(2492)

**077 468 3354, 077 288 0152**

# யாழில் மழையால் 7,010 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக 1901 குடும்பங்களைச் சேர்ந்த 7010 பேர் பாதிக்கப் பட்டுள்ளதுடன் 27 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

அந்த வகையில் சங்கானை பிரதேச செயலகப் பிரிவில் 573 குடும்பங்களைச் சேர்ந்த 2,335 பேரும், யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவில் 470 குடும்பங்களைச் சேர்ந்த 1,520 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரிவில் 265 குடும்பங்களைச் சேர்ந்த 928 பேரும், ஊர்காவற்துறை பிரதேச செயலக பிரிவில் 215 குடும்பங் களைச் சேர்ந்த 901 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவில் 171 குடும்பங்க ளைச் சேர்ந்த 599 பேரும், காரைநகர் பிரதேச செயலக பிரிவில் 141 குடும்பங்களைச் சேர்ந்த 508 பேரும் பாதிக்கப்பட்டனர்.

தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் 21 குடும்பங்களைச் சேர்ந்த 64 பேரும், கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 73 பேரும், நல்லூர் பிரதேச செயலக பிரிவில் 16 குடும்பங்களைச் சேர்ந்த 47 பேரும், பருத்தித்துறை பிரதேச செயலக பிரிவில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7,33)

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஆயாக்கடவை பிள்ளையார் கோயில் சூழலில் 9 பரப்பு செம்மண் காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டுவதற்கும், தோட்டம், பண்ணை என்பவற்றிற்கும் உகந்தது.

(2479)

**076 419 6358**

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்யப்பட்டு எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.





**U.S.A பாம்**

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

**077 868 9500**

(2491)

## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

38,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

(568)

**APEX TRAVELS**

**0777 597 598, 076 3333 644**

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய் ஆகிய பகுதிகளில் வீடு ஒன்று வாடகைக்கு தேவை

தொடர்புகளுக்கு :

**077 919 1529**

(2482)

## மின்சார கட்டணத்திலிருந்து விடுதலை

சீனா(China) மற்றும் இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட சூரிய விளக்குகள் (Solar Lights) வீட்டுத் தெரு, முற்றம், தோட்டம் ஏனைய இடங்களிற்கும் பொருத்துவதற்கு எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பொருத்தியும் தரப்படும்.

**விலை 7000 ரூபாவிலிருந்து**



"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்.என்.கம்பனி**



- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

**N5 எலக்ரிக்கல்ஸ்**

- 77, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 312 7895

**Hotline : 071 535 7799/ 071 554 7973**

(2485)

Save a Life



## உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான அழைப்பு

Save a Life, பிளாஸ்டிக் பாவனைக்கான மாற்றீட்டு பொருட்கள் உற்பத்தி செய்யும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கில் உற்பத்தியாளர்கள் மற்றும் துறைசார் ஆர்வலர்களை அழைக்கின்றது.

பனைசார் உற்பத்திகள், கடதாசி, மட்பாண்டம், தும்புத்தொழில், துணி மற்றும் வாழை நார் போன்றவற்றின் மூலம் மாற்றீட்டு பொருட்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்பவர்கள் மற்றும் ஆர்வலர்கள் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(2482)

தொடர்புகளுக்கு
+94 77 944 3577

இல 460, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் நீர்வேலியில் 9.3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. மாசுவன் சந்தியில் 750m தூரம் நன்னீர் ஊற்று செம்மண் நிலம் பிரித்து கொடுக்கப்படும்.

(C-1638)

**077 137 0386**
**077 470 1472**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 54 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

### நிலப்பரப்பு

- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- இரண்டு ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- இரண்டு பரப்புள்ள துண்டொன்றுக்குள் 6 - 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

ஒரு பரப்பின் விலை

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- கடற்கரையை (Beach) முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்.
- 20 அடிப் பாதையை முகப்பாகக் கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் 9,75000 ரூபாய் மட்டுமே.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம்
  காலை 6 மணி தொடக்கம்
  மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு : ஜெயம்

(2487)

**077 814 7389, 077 986 5457**

## கனடா நிரந்தர குடியுரிமை- பராமரிப்பாளர் -கருத்தரங்கு

கனடாவில் குடும்பத்துடன் நிரந்தரமாக வாழக்கூடிய வீட்டு உதவியாளர் (HOME SUPPORT WORKER), குழந்தை பராமரிப்பாளர் (HOME CHILD CARE PROVIDER) ஆகிய குடிவரவு திட்டங்களுக்கான கல்வி மற்றும் தயார்படுத்தலுக்கான கருத்தரங்கு

மற்றும் ஜேர்மனி, UK, மத்திய நாடுகள், சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் CARE GIVER ஆக வேலை செய்ய விரும்புபவர்களும் கலந்து கொள்ளலாம்.

இலங்கையிலேயே CARE GIVER கல்வியினை கற்று 50,000க்கு மேற்பட்ட சம்பளத்துடன் வேலையும் பெற்றுக்கொள்ளலாம்.

- வயதெல்லை- 17 முதல் 50 வரை
- கல்வித்தகுதி- அடிப்படைக்கல்வி அவசியம்
- ஆண்,பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம்

அனுமதிக்கட்டணம் 1000/=

நேரம்-12.00 திகதி-24.11.2024 (ஞாயிறு மதியம்)



(C-1639)

**CIMS** இல.49, சப்பல் லேன், யாழ்ப்பாணம் (யாழ் மத்திய கல்லூரி அருகில்) 0777068777/ 0777719322

## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 239/= | | |
| 1Kg Prima கோதுமை மா | - 159/= | | |
| 1Kg நவை | - 299/= | Max 2Kg | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 275/= | Max 5Kg | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 385/= | | |
| 1Kg வெள்ளை உழுந்து | - 750/= | | |
| 1Kg சிவப்பு கௌபி | - 688/= | | |
| 1Kg கீரி சம்பா | - 259/= | | |
| 1Kg சம்பா | - 230/= | | |
| 1Kg தீட்டல் பச்சை | - 235/= | | |
| 01 ஒசன் மீன்ரின் | - 365/= | ~~500/=~~ | |
| 01 சன் பப்படம் | - 185/= | ~~235/=~~ | |
| 400g லக்ஸ்பிறே பால்மா | - 985/= | ~~1050/=~~ | |
| 180 ml சன்சில்க் சம்போ | - 430/= | ~~480/=~~ | |
| 01 டசின் தீப்பெட்டி | - 175/= | ~~240/=~~ | |

1Kg சன்லைட் பவுடர்



320/= ~~380/=~~

400g Anchor



987/= ~~1050/=~~ Max : 01

ரூ.1000/= ற்கு பெறுமதியான கொள்வனவுகளை மேற்கொண்டு அங்கர் யோக்கட் ஒன்றினை இலவசமாக பெற்றிடுங்கள்.

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.

(568)

**Happy Supermarket 0777 8080 30**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.11.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.